www.freetnbooks.com

V11His

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2025

-----

வகுப்பு 11

நேரம்: 3.00 மணி

வரலாறு

மதிப்பெண்கள்: 90

பகுதி - I. 20×1=20

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. எழுத்துகள் அறிமுகமாவதற்கு முந்தைய காலகட்டம் ________ எனப்படுகிறது.
   (அ) வரலாற்றுக்கு முந்தைய காலம். (ஆ) வரலாற்றுக்காலம்
   (இ) பழங் கற்காலம் (ஈ) புதிய கற்கால
2. பகவதிசூத்திரம்ஒரு______நூலாகும்.
   (அ) பௌத்தம் (ஆ) சமணம் (இ) ஆசீவகம் (ஈ) வேதம்
3. மகதத்தின் முதல் அரசராக அறியப்படுபவர், ஹர்யங்கா வம்சத்தைச் சேர்ந்த__________.
   (அ) பிம்பிசாரர் (ஆ) அஜாதசத்ரு (இ) அசோகர் (ஈ) மகாபத்ம நந்தர்
4. கீழ்க்காணும் கூற்றுகளை வாசித்து தவறான கூற்றை வெளிக் கொணர்க.
   (i) களப்பிரர்கள் சைவத்தை ஆதரித்தனர்
   (ii) பல்லவரையும் பாண்டியரையும் களப்பிரர் தோற்கடித்தனர்
   (ii)இக்சவாகுகள் வேதவேள்விகளை ஆதரித்தனர்
   (iv) உப்பு வியாபாரிகள் உமணர் என்றழைக்கப்பட்டனர்
   (அ) (i) மற்றும் (ii) (ஆ) (ii) மற்றும் (iii)
   (இ) (i) மற்றும் (iii) (ஈ) (iii) மற்றும் (iv)
5. கூற்று: முற்கால வேதகாலத்தில் குழந்தைத் திருமணம் இருந்ததற்கான சான்றுகள் இல்லை.
   காரணம்: பின் வேதகாலத்தில் பெண்கள் சடங்குகளிலிருந்து விலக்கி வைக்கப்பட்டனர்.
   (அ) கூற்றும் காரணமும் சரியானவை. காரணம் கூற்றை விளக்குகிறது
   (ஆ) கூற்றும் காரணமும் சரியானவை; ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
   (இ) கூற்று சரியானது. காரணம் தவறானது.
   (ஈ) கூற்று, காரணம் இரண்டும் சரியானவை.
6. ___________பகுதியில் ரோமானிய நாணயங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன.
   (அ) அரிக்கமேடு (ஆ) ஆதிச்சநல்லூர் (இ) புகார் (ஈ) பல்லாவரம்
7. குப்தர் காலம் குறித்த கீழ்க்கண்ட சான்றுகளில் எது நம்ப முடியாதது என்று நீங்கள் கருதுகிறீர்கள்?
   (அ) இலக்கியச் சான்றுகள் (ஆ) கல்வெட்டு சான்றுகள்
   (இ) நாணயச் சான்றுகள் (ஈ) கதைகள், புராணங்கள்
8. கீழ்க்கண்டவற்றுள் ஹர்ஷரால் எழுதப்பட்ட நூல் எது?
   (அ) ஹர்ஷசரிதம் (ஆ) பிரியதர்சிகா
   (இ) அர்த்த சாஸ்திரம் (ஈ) விக்ரம ஊர்வசியம்

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner

www.freetnbooks.com



9. தேர்ந்தெடுத்துப் பொருத்துக.

| | |
|---|---|
| (i) சிம்மவிஷ்ணு. | -1. சாளுக்கிய அரசன் |
| (ii) முதலாம் ஜெயசிம்மன். | - 2. பல்லவ அரசன் |
| (iii) முதலாம் ஆதித்தன். | 3.கப்பல் தளம் |
| (iv) மாமல்லபுரம். | 4. சோழஅரசன் |

(அ) 4, 3, 1, 2. (ஆ) 4, 1, 2, 3
(இ) 2, 1, 4, 3. (ஈ) 4,3,2,1

10.இபின் பதூதா ஒரு ________ நாட்டுப் பயணி
(அ) மொராக்கோ (ஆ) பெர்சியா (இ) துருக்கி (ஈ) சீனா

11.வறட்சிப்பகுதியான இராமநாதபுரத்தில் பாண்டிய அரசர்கள் ________ ஐக் கட்டினார்கள்.
(அ) அகழிகள் (ஆ) மதகுகள் (இ) அணைகள் (ஈ) ஏரிகள்

12. ________. கோல்கொண்டா கோட்டையைக் கட்டினார்.
(அ) இராஜா கிருஷ்ண தேவ் (ஆ) சுல்தான் குலி-குதுப்-உல்-முல்க்
(இ) முகமது கவான் (ஈ) பாமன்ஷா

13. மராத்திய மன்னர் சிவாஜியின் சமகாலத்தவர்________ஆவார்.
(அ) இராமானந்தர் (ஆ) மீராபாய் (இ) சூர்தாஸ் (ஈ) துக்காராம்

14. பாதுஷா நாமா என்பது ________வாழ்க்கை வரலாறாகும்.
(அ) பாபர் (ஆ) ஹுமாயூன் (இ) ஷாஜகான் (ஈ) அக்பர்

15. சிவாஜியின் ஆலோசனை சபை ________என்று அழைக்கப்பட்டது.
(அ) அஷ்டபிரதானம் (ஆ) அஷ்டதிக்கஜங்கள்
(இ) நவரத்தினங்கள் (ஈ) பஞ்சபாண்டவர்கள்

16. நீலநீர்க் கொள்கையுடன் தொடர்புடையவர்________.
(அ) பிரான்ஸிஸ்கோ டி அல்மெய்டா (ஆ) அல்போன்ஸோ டி அல்புகர்க்
(இ) நீனோ டா குன்கா (ஈ) ஆன்டோனியோ டி நாரான்கா

17. ________"தமிழ் அச்சுப்பதிப்பின் தந்தை" என்று அழைக்கப்படுகிறார்.
(அ) இராபர்டோ டி நொபிலி (ஆ) அல்போன்சோ டி அல்புகர்க்
(இ) ஹென்ரிக்ஸ் (ஈ) பிரான்சிஸ்கோ டி அல்மெய்டா

18. ________இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆதிக்கம் உண்மையில் நிறுவப்படக் காரணமான போராகும்.
(அ) பிளாசிப் போர் (ஆ) முதலாம் கர்நாடகப் போர்
(இ) பக்சார் போர் (ஈ) வந்தவாசிப் போர்

19. இரயத்துவாரி முறையை அறிமுகப்படுத்தியவர்________.
(அ) காரன்வாலிஸ் (ஆ) தாமஸ் மன்றோ
(இ) ராபர்ட் கிளைவ் (ஈ) வாரன் ஹேஸ்டிங்ஸ்

20. சிவாஜியின் ஆட்சிக்குப் பிறகு வந்தவர்களைக் கால வரிசைப் படி எழுதவும்.
(அ) சாம்பாஜி, சாஹூ, ராஜாராம், இரண்டாம் சாம்பாஜி
(ஆ) சாம்பாஜி, ராஜாராம். ,சாஹூ, இரண்டாம் சாம்பாஜி
(இ) ராஜாராம், சாம்பாஜி, சாஹூ, இரண்டாம் சாம்பாஜி
(ஈ) சாம்பாஜி, இரண்டாம் சாம்பாஜி, ராஜாராம், சாஹூ,

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner

www.freetnbooks.com



## பகுதி - II

குறிப்பு: எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 7 × 2 = 14
வினா எண் 30-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

21) ஹோமினின் குறித்து சிறு குறிப்பு வரைக.
22) மகாவீரருடைய போதனைகளின் மையக்கருத்து என்ன?
23) "சத்ரப்கள்" பற்றி நீவிர் அறிவது யாது?
24) ஐஹோல் கல்வெட்டு குறித்துச் சிறு குறிப்பு வரைக.
25) பாண்டிய அரசின் மீதான மாலிக்காபுரின் படையெடுப்பின் விளைவுகள் யாவை?
26) சிறு குறிப்பு வரைக. (அ) சௌத் (ஆ) சர்தேஷ்முகி
27) "சராப்" மற்றும் " உண்டியல்" பற்றி நீவிர் அறிவன யாவை?
28) இந்திய குடிமைப் பணிக்கு காரன்வாலிசின் பங்களிப்பைப் பற்றி கூறுக.
29) பாபர் இந்தியாவின் மீது படையெடுக்கத் தூண்டியது எது?
30) தாமஸ் மன்றோ.

## பகுதி - III

குறிப்பு: எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 7 × 3 =21
. வினா எண் 40-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

31) ஹரப்பா பொருளாதாரத்திற்குப் பங்களித்த கைவினைத் தயாரிப்பு குறித்து எழுதுக.
32) இந்தியாவின் மகா அலெக்ஸாண்டரின் படையெடுப்பின் தாக்கங்களைக் குறிப்பிடுக.
33) சங்க காலத்தில் தமிழ் நிலத்தின் ஐந்து திணைகள் .
34) எல்லோரா மற்றும் எலி:.பெண்டாவின் நினைவுச்சின்னங்கள்.
35) மாலிக்காபூரின் தென்னிந்திய தாக்குதல்கள் குறித்து எழுதுக.
36) கோல்கொண்டா கோட்டை எங்கே கட்டப்பட்டது? அதன் அமைப்பை விவரி.
37) பக்தி இயக்கத்தின் விளைவுகளை சுட்டிக்காட்டுக.
38) முகலாயர் ஆட்சியில் நிறுவப்பட்ட ஐரோப்பியக் குடியேற்றங்கள்.
39) நயங்காரா முறை.
40) ஆம்பூர் போர்.

## பகுதி - IV

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 × 5 = 35

41) அ) வரலாற்றுக்கு முந்தைய இந்தியா குறித்து விளக்குக.

(அல்லது)

ஆ) பொ. ஆ.மு ஆறாம் நூற்றாண்டில் ஏற்பட்ட அறிவு மறுமலர்ச்சிக்கான காரணங்கள் யாவை?

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner

www.freetnbooks.com



42) அ) இந்தியாவின் மீது பாரசீகரிகளின் தாக்கம் குறித்து நாம் அறிவது என்ன?

(அல்லது)

ஆ) கலைக்கும் இலக்கியத்துக்குமான கனிஷ்கரின் பங்களிப்பு குறித்து விவாதிக்கவும்.

43) அ) ராஷ்டிர கூடர்களின் சிறப்புகள் யாவை?

(அல்லது)

ஆ) இந்திய வரலாற்றில் இரண்டாம் தரைய்ன் போர் திறப்புமுனையாக அமைந்தது எவ்வாறு?

44) அ) சோழர் காலத்தில் உருவாக்கப்பட்ட பாசன விவசாய நீர்வளத் திட்டங்கள்
அதிக வருமானத்திற்கு வழிவகுத்தன - ஆராய்ந்து எழுதுக.

(அல்லது)

ஆ) முகமது கவானின் ஆட்சி முறை மற்றும் ராணுவ நிர்வாகம் பற்றி விவரி?

45) அ) பக்தி இயக்கத்தின் சிறப்பியல்புகளை வரிசைப்படுத்துக.

(அல்லது)

ஆ) ஔரங்கசீப்பின் தக்காண கொள்கை எவ்வாறு முகலாயப் பேரரசின் அழிவுக்கு வழிவகுத்தது?

46) அ) இந்திய வரைபடத்தில் குப்தப் பேரரசின் எல்லைகளை வரைந்து கீழ்க்கண்ட இடங்களை குறிக்கவும்.

(அ) உஜ்ஜையினி (ஆ) நாளந்தா (இ) காசி

(அல்லது)

ஆ) வெல்லெஸ்லி அறிமுகப்படுத்திய துணைப்படை திட்டத்தினைப் பற்றி விவரி.

47) அ) மாமல்லபுரம் கடற்கரைக் கோயில்களின் கட்டடக்கலை மேன்மைகளை
விளக்குக.

(அல்லது)

ஆ) மராத்திய மன்னர் சிவாஜியின் ஆட்சி காலத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளுக்கு காலக்கோடு வரைக.

- - - - -

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner